# திராவிட மாடல் அரசு 36

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**




## உங்கள் உரிமை.. எங்கள் கடமை...!

‘‘சுயராச்சியம் வருகிறது, புதுவாழ்வைத் தொடங்கப் போகிறது என்று ஆண்டு பல பேசியாகிவிட்டது. அதன் சுவை குறைந்துவிட்டது. ஆகவே ‘சோசியலிசம் வருகிறது, இன்னல் ஒழிந்துவிடப் போகிறது, உனக்குப் பாதுகாப்புக் கிடைக்கப் போகிறது’ என்ற புதிய பேச்சு ஆரம்பமாகி இருக்கிறது. இது வெறும் ‘சொல்லாடை’. சோசியலிசம் பேசி மக்களை ஏமாற்றுவதை எதிர்க்கிறோம். சோசியலிசத்தை எதிர்க்கவில்லை” என்று பேரறிஞர் அண்ணா ஒருமுறை தன் உரையில் குறிப்பிட்டார்.

அன்று ‘சோசியலிசம்’ எப்படியோ, அதுபோன்ற ஒரு ‘சொல்லாடை’தான் இன்று, ‘அச்சே தின்’ என்பதும். ‘நல்ல நாள் வருகிறது, இதோ வந்து கொண்டே இருக்கிறது, இன்னும் சீக்கிரமே வந்துவிடும்’ என்று சொல்லிச் சொல்லியே பத்தாண்டு காலத்தை ஓட்டிவிட்டது ஒன்றிய அரசு.

அவர்கள் சொன்ன அந்த ‘நல்ல நாள்’ தமிழ்நாட்டு மக்களுக்கு செப்டம்பர் 15- ஆம் நாள் உதித்தது. ஆம்... ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ குடும்பத் தலைவிகளுக்குத்தான் என்றாலும், அவர்கள்தானே ஒவ்வொரு குடும்பத்துக்கும் விடியல்...!

ஒரு நாடு நன்றாக இருக்கவேண்டுமென்றால், முதலில் வீடு நன்றாக இருக்க வேண்டும் என்பார்கள். காலை முதல் இரவு வரை குடும்பத் தலைவிகள் செய்யும் பணிகளைப் பட்டியலிட்டால், அவர்களின் உழைப்புக்கு எதையும் நம்மால் இணை வைக்க முடியாது. ஒரு நாட்டின்



பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாக இருந்து உதவும் இந்த ‘மனிதவளம்’ இதுவரை அங்கீகரிக்கப்படவே இல்லை. அந்த உழைப்பை அங்கீகரிக்கும் பொருட்டே உதயமாகி இருக்கிறது, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ செயல்படுத்தும் **‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’**.

### நிறைவேற்றப்பட்ட தேர்தல் வாக்குறுதி

மேலை நாடுகளில் உள்ளது போல ‘அனைவருக்கும் அடிப்படை வருமானம்’ (யுனிவர்சல் பேஸிக் இன்கம்) போன்ற ஒரு திட்டம் இந்தியாவில் வேண்டும் என்று பல கட்சிகளும் பேசிக் கொண்டிருந்த வேளையில், ‘அனைவருக்கும் வருமானம் லட்சியம், பெண்களுக்கு நிச்சயம்’ என்கிற அடிப்படையில் **‘குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய்’** என்று கழகம் தனது தேர்தல் வாக்குறுதியை அளித்தது.

அதைக் கேட்ட எதிர்க்கட்சிகள் பல, ‘இதெல்லாம் நடக்கிற காரியமா?’ என்று கேலி செய்தன. விமர்சித்தன. ஆனால் ‘சொன்னதைச் செய்வதுதானே’ கழகத்தின் ஸ்டைல்..? 2021- மே மாதம் ‘திராவிட மாடல் அரசு’ அமைந்தவுடன் அதன் முன்பிருந்த பெரிய சவால், மாநிலத்தின் நிதி நிலைமையைச் சரிசெய்வது.

அது சரி செய்யப்பட்டவுடன் 2023-2024-ஆம் ஆண்டுக்கான மாநில நிதிநிலை அறிக்கையில், “குடும்பத்தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என்று சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

### திட்டத்தின் இரண்டு நோக்கங்கள்

அங்கீகாரத்துக்கு ஏங்காத மனங்கள்தான் உண்டா இந்தப் பூமியில்? கழக அரசின் இந்தத் திட்டத்தை வெறும் தேர்தல் அரசியல் என்று பார்ப்பது தவறானது. இது ஓர் அங்கீகாரம். அதனால்தான் இந்தத் திட்டத்துக்கு **‘இலவசம்’, ‘உதவித் தொகை’ என்றெல்லாம் சொல்லாமல் ‘உரிமைத் திட்டம்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

ஆம். இந்தத் திட்டத்தின் இரண்டு நோக்கங்களில் முதல் நோக்கம், பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம். இரண்டாவது நோக்கம், ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது.

நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என் பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவர்கள்.

> ➢ பெறப்பட்ட விண்ணப்பங்கள் : **1** கோடியே **63** இலட்சம்.
>
> ➢ தேர்வு பெற்ற பயனாளிகள் : **1** கோடியே **6** இலட்சத்து **50** ஆயிரம்.
>
> ➢ திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு : இந்த ஆண்டுக்கு **7** ஆயிரம் கோடி ரூபாய்.
>
> ➢ இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள வங்கிகள் : சுமார் **60**.
>
> ➢ இந்தத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட தொகையைப் பல வங்கிகள் பிடித்தம் செய்துள்ளன. அதைச் சரிசெய்வதற்கான நடவடிக்கைகளைக் கழக அரசு மேற்கொண்டு வருகிறது. அவ்வாறு பிடித்தம் செய்யப்பட்டிருந்தால் அது குறித்துப் புகார் அளிக்க ‘முதல்வரின் முகவரி’ உதவி மைய தொலைபேசி எண் : **1100.**

### விடுபடாத தகுதியான பயனாளிகள்

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களான சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயனடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும் என்று முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

அதன் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட மக்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற ஆவணங்கள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்குரிய வழிவகைச் செய்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து மூன்று கட்டங்களாக, சிறப்பு முகாம்கள் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தகுதியான பயனாளிகள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளிலும், அஞ்சல் நிலையங்களிலும் கணக்குத் தொடங்கப்பட்டு உரிமைத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

‘பொன் வைக்கிற இடத்தில் பூ வைப்பது போல’ என்பது தமிழர் பண்பாட்டில் உள்ள வழக்கு. நாம் பொன்னுக்குப் பதிலாக உரிமைகளை வழங்கியிருக்கிறோம். ஏனென்றால், பொன் விலைபோகும். பூ வாடிவிடும். உரிமையோ வாழ வைக்கும்..!

**...சாதனை தொடரும்**

## ‘நீட்’ பாசம் செய்யும் மோசம்!

2016-ஆம் ஆண்டு 50 சதவிகிதம் மதிப்பெண்கள் எடுத்தால்தான் பட்ட மேற்படிப்பு செல்லமுடியும். அன்று பட்ட மேற்படிப்புத் தேர்வு எழுதிய மருத்துவர்களில் பெரும்பான்மை யானவர்கள் 50 சதவிகிதத்துக்கும் மேல் மதிப்பெண் எடுத்ததால் இந்த விதியால் பிரச்சினை இல்லை. ஆனால், இம்முறை பட்ட மேற்படிப்புத் தேர்வு எழுதியவர்களில் பலரும் ‘0’ அல்லது அதற்கும் குறைவாகவே மதிப்பெண் எடுத்துள்ளார்கள். எனவே பட்ட மேற்படிப்பு நுழைவுத் தேர்வில் 50 சதவிகிதம் மதிப்பெண்கள் எடுத்தால்தான் பட்ட மேற்படிப்பு செல்ல முடியும் என்றால், இவர்களால் பட்ட மேற்படிப்பு படிக்க முடியாது.

எனவே இவர்களுக்காக, ‘0’ மதிப்பெண் எடுத்தாலும், ஏன் அதற்குக் கீழ் எடுத்தாலும்கூட நீங்கள் பட்ட மேற்படிப்புச் செல்லலாம் என்று ஒன்றிய அரசு ஆணை வழங்கியுள்ளது. 2016-இல் 50 சதவிகிதம் மதிப்பெண்கள் எடுத்தவர்கள் யார்? இவர்கள் 12-ஆம் வகுப்பு மதிப்பெண்கள் மூலம் மருத்துவக்கல்லூரியில் சேர்ந்தவர்கள். 2023-இல் ‘0’ கூட எடுக்காமல் நெகட்டிவில் எடுத்திருப்பது யார்? இவர்கள் 2017-க்குப் பிறகு ‘நீட்’டில் சேர்ந்தவர்கள்

எனவே, நீட் மூலம் எம்.பி.பி.எஸ் சேர்ந்தவர்களால் பட்ட மேற்படிப்பு நுழைவுத் தேர்வில் ‘0’ கூட எடுக்க முடியாத நிலை இருப்பதால்தான் இந்தச் சட்டத் திருத்தமே தேவைப்பட்டது என்பதுதான் செய்தி.

இது இத்துடன் நிற்காது. இந்த ‘நீட்’ கோமாளிகள் இன்று எம்.டி, எம்.எஸ். சேர்ந்துவிட்டு, மூன்று வருடம் கழித்து எம்.டி, எம்.எஸ் தேர்வு எழுதும்போது அந்தத் தேர்வுக்கும் ‘பாஸ்’ மார்க் ‘0’ இருக்கவேண்டும் என்று அடம்பிடிப்பார்கள்.

“நாம் கொண்டு வந்த நீட்டினால் வந்தவர்கள் இவர்கள்” என்ற பாசத்தினால் அதற்கும் வாய்ப்புள்ளது.

**-மருத்துவர் மரியோ ஆண்டோ புருனோ ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்





தியானேஸ்வரன்

### பேரறிஞரிடம் உண்டியல்!

என் தாத்தா சுந்தரம் அவர்கள் கழகம் தொடங்கப்பட்ட நாள் முதலே பேரறிஞர் அண்ணாவின் மீது பற்றுக்கொண்டிருந்தார். இதன் காரணத்தால் என் தந்தையையும், சித்தப்பாவையும் அத்தகைய உணர்வுடனே வளர்க்க நினைத்தார். கருப்பு சிவப்பு நிறத்தில் உண்டியல் ஒன்றை வாங்கி, அதில் சிறிது சிறிதாக நிதி சேமிப்புச் செய்ய என் தந்தையை ஊக்குவித்தார். அடிக்கடி அண்ணாவின் பெயரைச் சொல்லி ‘இந்த உண்டியலை அண்ணாவிடம் அளிக்க வேண்டும்’ என்றும் சொல்லி வந்திருக்கிறார். 8.11.1966 அன்று ஈரோட்டுக்கு வருகை தந்த அண்ணாவிடம் சிறுவர்களாக என் தந்தையும், சித்தப்பாவும் உண்டியலை அளித்து விட்டு, அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்களாம். இந்தப் படத்தைக் காட்டி, சிறு வயது ஞாபகங்களை என்னிடம் அடிக்கடி சிலாகித்துச் சொல்லுவார் என் தந்தை.

**-இரா.தியானேஸ்வரன், பகுதி முன்னாள் துணை அமைப்பாளர், இளைஞர் அணி, கோட்டை, ஈரோடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### குறளோவியம் தீட்டப்படுகிறது

**1976-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் தேதி சென்னை தலைமைச் செயலகத்தில் கலைஞர் தலைமையில் வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பிப்ரவரி மாதம் 22, 23 ஆகிய தேதிகளில் திறப்பு விழா மிகப் பிரமாண்டமாகக் கொண்டாட நாள் குறிக்கப்பட்டது. ஆனால், ஜனவரி 31-ஆம் தேதி கழக அரசு கலைக்கப்பட்டது. அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கலைஞர் அழைக்கப்படாமலேயே வள்ளுவர் கோட்டம் திறக்கப் பட்டது. ‘‘கோட்டம் திறக்கப்படுகிறது, குறளோவியம் தீட்டப்படுகிறது’’ என ‘முரசொலி’யில் நெடும் கட்டுரை எழுதினார் கலைஞர் .**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 251




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131